பக்கங்கள் 13+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 23 புதன்கிழமை 07.01.2026 | அதிர்வு 161

சட்டவிரோத மதுபானம் அருந்தி

# சாவடைந்தோர் எண்ணிக்கை 7 ஆக உயர்வு!

8 பேர் வைத்தியசாலையில்

வென்னப்புவ பகுதியில் சட்டவிரோத மது பானம் அருந்தி உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 7ஆக அதிகரித்துள்ளது. 03▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# யாழில் கனமழையால் பேரழிவு ஏற்படலாம்!

## பேராசிரியர் பிரதீபராஜா பகிரங்க எச்சரிக்கை




(எஸ்.நிதர்ஷன்)

தற்போது உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுமண்டலத்தால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 650 மில்லிமீற்றருக்கும் மேலான மழை பெய்யும் என எச்சரித்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா, இதன் தாக்கம் யாழ். மாவட்டம் 03▶

# ஹரிணிக்கு எதிரான பிரேரணையில் கையெழுத்திட்ட எதிர்க்கட்சித் தலைவர்



கல்வி அமைச்சராகவும் பிரதமராகவும் செயற்படும் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று கையொப்பம் இட்டார்.

எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின்னரே அவர் கையொப்பம் இட்டுள்ளார்.

தற்போதைய அரசின் கல்விச் சீர்திருத்தங்கள் மாணவர்களின் மனத்துக்குப் பொருத்தமற்ற பல 04▶

# பிரதமர் ஹரிணி அமரசூரிய பதவி விலகத் தேவையில்லை

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அதிரடிக் கருத்து





பிரதமர் கலாநிதி ஹரிணி அமர சூரிய பதவி விலக வேண்டும் எனத் தாம் கூறமாட்டேன் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் பதவி விலகல் குறித்து அழைப்பு விடுப்பது தமது நிலைப்பாடு அல்ல எனவும் அவர் கூறினார்.

அரசின் செயற்பாடுகள் மற்றும் நாட்டின் நிலை குறித்து பொறுப்புடன் அணுக வேண்டும் எனவும், ஜனநாயக முறையில் தீர்வுகள் தேடப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தரம் 6 மாணவர்களுக்குரிய ஆங்கிலப் பாடப்புத்தகத்தில் வயது வந்தோருக்கான இணையத்தளம் ஒன்றின் முகவரி அச்சிடப்பட்டிருந்த விவகாரம் இலங்கை அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் கல்வி அமைச்சுப் பதவியை வகிக்கும் பிரதமர் பதவி விலக வேண்டும் எனப் பல தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் கொண்டு வரும் நடவடிக்கையில் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி களமிறங்கியுள்ளது.

இது தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ விடம் ஊடகங்களால இன்று வினவப் பட்டது. இதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# சேர். பொன் அருணாசலம் நினைவு தினம் ஜனாதிபதி செயலகத்தில் வெள்ளியன்று!

ஈழத்தமிழர்களின் வரலாற்றிலும், இலங்கையின் அரசியல் மறுமலர்ச்சியிலும் மிகமுக்கியமான ஒரு ஆளுமையும், கொடைவள்ளலுமான சேர். பொன் அருணாசலத்தின் 102 ஆவது நினைவு தினம் எதிர்வரும் 9 ஆம் திகதி,வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சேர்.பொன் அருணாசலம் நிதியத்துடன் இணைந்து, கொழும்பு வடக்கு சைவ பரிபாலன சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார்.

அன்றைய தினம் பிற்பகல் 4.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் உள்ள சேர். பொன் அருணாசலத்தின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்துதலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.



சேர். பொன் அருணாசலம், பிரித்தானியர்களால் இலங்கை அரச பணிக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையர் என்ற பெருமைக்குரியவராவார். 1919ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை தேசிய காங்கிரஸின் முதல் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சேர். பொன் அருணாசலம் தமிழர் – சிங்களவர் ஒற்றுமைக்காக அரும்பாடுபட்டார்.

இலங்கைக்கெனத் தனிப் பல்கலைக்கழகம் ஒன்று வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, "இலங்கை பல்கலைக்கழகச் சங்கம்" உருவாகக் காரணமாக இருந்தனால் இவர் "இலங்கை பல்கலைக்கழகக் கல்வியின் தந்தை" எனப் புகழப்படுகின்றார்.

நீதிபதி, மாவட்ட அதிபர் எனப் பல்வேறு அரச பதவிகளை அலங்கரித்த இவர், தலைமைப் பதிவாளர் நாயகமாகப் பணியாற்றிய காலப்பகுதியில் இவர் செய்த சீர்திருத்தங்கள் இன்றும் பேசப்படுகின்றன. 1901ஆம் ஆண்டு இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை இவரது மிகச் சிறந்த படைப்பாகக் கருதப்படுகின்றது. இது இலங்கையின் சமூக, பொருளாதார நிலையைத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டியது. இவரது சேவையைப் பாராட்டி பிரித்தானிய அரசு 1913ஆம் ஆண்டு 'சேர்' பட்டம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சம்பள உயர்வு தொழிலாளர்களுக்கு பாதுபாடின்றி வழங்கப்பட வேண்டும்

## மனோ, திகா எம்.பிக்கள் கூட்டாக வலியுறுத்து





"தோட்டத் தொழிலாளருக்கான இந்த மாத சம்பள உயர்வு 400 ரூபா அடுத்த மாதம் வழங்கப்படவுள்ளது. இதையிட்டு மகிழ்ச்சி. அப்படி அது வழங்கப்படும் போது, 3 அரசாங்க பெருந்தோட்ட நிறுவனங்கள், 22 தனியார் தோட்ட நிறுவனங்கள், சிறு தோட்ட உடைமையாளர் தோட்டங்கள், தனியார் சிறு தோட்டங்கள், ஆகிய நான்கு பிரிவு தோட்டங்களில் தொழில் புரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் இந்த சம்பள உயர்வு கிடைக்க வேண்டும். கடந்த வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பின் போது, அரசுக்கு ஆதரவாக தமிழ் முற்போக்குக் கூட்டணி எம்பிக்கள் வாக்களித்தோம். அதன்போது இதைத் சொல்லித்தான் நான் வாக்களித்தேன். இப்போதும் அதையே இங்கே தொழில் அமைச்சர் அணில் ஜயந்த பெர்னாண்டோ, பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் தொழில் அமைச்சின் அமைச்சக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் தொழில் அமைச்சர் அணில் ஜயந்த பெர்னாண்டோ, பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க. மனோ கணேசன் எம்.பி., திகாம்பரம் எம்.பி., கலைச்செல்வி எம்.பி. உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஊடக செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட திகாம்பரம் எம்.பி., "அரசின் 200 ரூபா கிடைக்கும் என எண்ணுகின்றேன். ஆனால், கம்பனித் தோட்டங்களில் இப்போதே, தொழிலாளர் கொண்டு வர வேண்டிய கொழுந்து நிறை தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது. வழமையை விட அதிக நிறை கொண்டு வர வேண்டும். இல்லாவிட்டால், முழு நாள் சம்பளம் தர மாட்டோம் என்று இப்போதே கம்பனிகள் தொழிலாளரிடம் கூறத் தொடங்கி விட்டன. இதை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், நீங்கள் சொன்ன சம்பள உயர்வு 400 ரூபா கிடைக்காது." – என்று கூறினார்.

இவ்வேளையில் மீண்டும் கருத்துக் கூறிய மனோ கணேசன் எம்.பி., "எல்லா காலத்திலும், எல்லாப் பிராந்தியங்களிலும் ஒரே மாதிரியான, கொழுந்து கிடைப்பதில்லை. ஆகவே அதை வைத்துக்கொண்டு நிறுவனங்கள் சம்பளத்தைக் குறைத்து வழங்கி விளையாடாமல், கண்காணிப்பது அரசின் பணியாகும். அதை இந்தத் தொழில் அமைச்சு, குறிப்பாக அமைச்சர் அணில் ஜயந்த பெர்னாண்டோ, பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க ஆகியோர் கவனத்தில் எடுப்பார்கள் என நான் நம்புகின்றேன்." – என்று தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழில் கனமழையால்...

இதுவரை எதிர்கொள்ளாத அளவு பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும் என்றும் எச்சரித்துள்ளார்.

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் வகையில் யாழ். ஊடக அமையத்தில் இன்று ஊடக சந்திப்பை நடத்திய அவர், இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

"உருவாகியுள்ள தாழ்வுமண்டலமானது, நாட்டின் கிழக்கு கடற்கரையை நோக்கி நகரவுள்ளது. இது மணிக்கு 9 கிலோமீற்றர் வேகத்தில் நகரவுள்ளது என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்றும் வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக 1970 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஜனவரி மாதத்தில் உருவாகியுள்ள 21 ஆவது தாழ்வுமண்டலமாக அமைகின்றது.

ஆனாலும், கடந்து சென்ற தாழ்வு மண்டலங்களை விட இது அதிக தாக்கத்தை ஏற்படுத்தும். அதாவது இதன் நகர்வும் பாதை கடல் பகுதியாக இருந்தாலும் வடக்கு நோக்கி நகரும் போது தரையையும் ஊடறுத்துச் செல்லவுள்ளது. அத்துடன் மிக குறைந்தளவு வேகத்தில் நகர்வதால் எதிர்வரும் 8, 9,10 ஆம் திகதிகளில் கிழக்கு மாகாணம் பாரியளவு மழைவீழ்ச்சியை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது.

அத்துடன் 9, 10 ஆம் திகதிகளில் யாழ். மாவட்டம் மிக அதிக மழைவீழ்ச்சியை எதிர்கொள்ளவுள்ளது. இதன் தாக்கம் டித்வா புயலால் தென்பகுதி எதிர்கொண்ட பேரழிவுகளை விட அதிகமாக இருக்கும் எனவும் எதிர்பார்க்க முடிகின்றது.

அத்துடன் இந்தப் பாதிப்பால் விவாசாயிகள் பாரிய பயிரழிவுகளை எதிர்கொள்ள நேரிடும். துறைசார் அதிகாரிகள் இது தொடர்பில் துரித முன்னேற்பாடுகளை முன்னெடுப்பது சிறந்தது.

பொதுமக்கள் இந்த விழிப்புணர்வு எச்சரிக்கையை அவதானத்தில் கொண்டு தங்களது பாதுகாப்பை உறுதி செய்வது அவசியமாகும்.

இதேநேரம் ஜனவரி 8 ஆம் திகதி முதல் நாடு முழுவதும், குறிப்பாக வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் மழையுடனான கால நிலை மேலும் அதிகரிக்கும்." – என்றார்.

### சாவடைந்தோர்...

மேலும் 8 பேர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒரு ஆண் மற்றும் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆண் சந்தேகநபர் மேலதிக விசாரணைக்காகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இரு பெண்களும் மாரவில நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 19ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**ஹரிணிக்கு...**

விடயங்களையும், பாட அலகுத் தொகுதிகளில் பல்வேறு பிழைகளைக் கொண்டு காணப்படுவது மற்றும் இது தொடர்பாக சரியான நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது.

ஏனைய எதிரணி உறுப்பினர்களிடம் கையொப்பம் திரட்டும் நடவடிக்கையும் ஆரம்பமாகியுள்ளது.
























## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# உள்வீட்டுச் சதியா?

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் ஆறாம் ஆண்டுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டி நூலில் தவறான இணைய தளத்தினுடைய இணைப்பு சேர்க்கப்பட்டமைதான் இப்போது இலங்கை அரசியலில் பேசு பொருள்.

அது ஒரு சதித் திட்டத்தின் பெறு பேறு என்று கூறப்பட்டாலும் யார் அதன் சூத்திரதாரி என்பதுதான் கேள்வி.

இந்த விவகாரத்தைப் பெரிய சர்ச்சை யாக்கி கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரியவை பதவியிலிருந்து வீழ்த்துவதற்கு எதிர்க்கட்சிகள் தரப்பில் நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற அளவு வரை முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், இந்த விவகாரத்தின் பின்னணி தொடர்பில் எதிர்க்கட்சிப் பிரதிநிதி ஒருவர் குறிப்பிடுகின்ற விடயம் இப்போது அவதானத்திற்கு உரியதாக உள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரியவை பதவி விலக்கி, அவரின் அரசியலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஜே.வி.பி. நகர்த்தியுள்ள சதித்திட்டமே இது என - அதாவது இது ஒரு உள்வீட்டு நகர்வு என்று - தெரிவித்துள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, அதன் ஓர் அங்கமாகவே பாடப் புத்தகத்தில் சர்ச்சைக்குரிய விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் கூறியிருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமையன்று இடம்பெற்ற கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

"ஆறாம் தரப் பாடப்புத்தகத்தில் சர்ச்சைக்குரிய ஒரு விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்போது அது விவகாரமாகியுள்ளது. இது திட்டமிடப்பட்ட ஒரு சதி. பிரதமர் ஹரிணி அமரசூரியவை பதவி விலக்குவதற்கும், அவரது அரசியலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் ஜே.வி.பியின் தலைமையகத்தில் தீட்டப்பட்ட சூழ்ச்சியின் வடிவமாகவே இந்தப் பாடப்புத்தக சர்ச்சை உள்ளது. பிரதமர் ஹரிணி உட்பட தேசிய மக்கள் சக்தி எம்.பிக்கள் தாம் ஜே.வி.பியின் உறுப்பினர்கள் அல்லர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. தேசிய மக்கள் சக்தி எம்.பிக்கள் அனைவரினதும் மாதச் சம்பளமும் பெலவத்தவில் உள்ள ஜே.வி.பியின் தலைமையக நிதியத்துக்கே செல்கிறது. ஆகவே, கட்சியின் உறுப்புரிமையை பெறாமலேயே பிரதமர் ஹரிணி அமரசூரிய உட்பட தேசிய மக்கள் சக்தியின் ஜே.வி.பி அல்லாத உறுப்பினர்களும் அதன் அங்கத்தவர்களாகியுள்ளார்கள். ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சாதாரணமானவர் அல்லர். பிரதமர் ஹரிணியை அவர்கள் விடப்போவதில்லை." - என்று உரைத்திருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி.

அவர் கூறுகின்ற உள்வீட்டுச் சதி என்ற ஜே.வி.பியின் முதுகில் குத்தும் நரித்தனத்துக்குச் சாத்தியம் இல்லை என்று மறுத்து விட முடியாது. சரி, அதுதான் உண்மை என்றால் - அப்படியாயின் - பிரதமர் பதவியில் இருந்து ஹரிணி அமரசூரியவை அகற்ற ஜே.வி.பியின் ஒரு தரப்பினர் எடுக்கும் உள்வீட்டுச் சதி முயற்சிக்கு, பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முயற்சியை நகர்த்துவதன் மூலம் பிரதான எதிர்க்கட்சிக்கான சமிந்த விஜேசிறியின் ஐக்கிய ஐக்கிய மக்கள் சக்தியும் சேர்ந்து உதவுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியினர்தான் இதற்குப் பதில் தர வேண்டும்.

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இரண்டு பேர் கைது!

(பாறுக் ஷிஹான்)

போதைப்பொருள் விற்பனையில் நீண்ட காலம் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இரண்டு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


அம்பாறை தலைமையக பொலிஸ் நிலையத்தின் ஊழல் தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின்படி உகண பகுதி திஸ்ஸபுர 21 கிராமத்திலிருந்து அம்பாறை நகரத்துக்குப் போதைப் பொருள் விற்பனை செய்வதற்காகச் சென்றனர் இரண்டு சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை இரவு அம்பாறை டி.எஸ். சேனநாயக்க சந்திப்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். கைதானவரிடம் மேற கொண்ட விசாரணையின் போது மற்றுமொரு சந்தேக நபர் இரவு 10 மணியளவில் அம்பாறை பாலிகா சந்திப்பில் கைது செய்யப்பட்டார். இந்த சந்தேக நபர்களில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரும்உள்ளடங்குகின்றார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 2101 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 8757 மில்லி கிராம் ஐஸ் ஆகியவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த போதைப்பொருள் உகண 21 திஸ்ஸபுர பகுதியிலிருந்து அம்பாறைக்கு சிறிது காலமாக கடத்தப்பட்டு வருகிறது என்றுள விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



மேலம் கிழக்குப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தரவின் உத்தரவின் பேரில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்லவின் தலைமையில் அம்பாறை பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பண்டாரவின் ஒருங்கிணைப்பில் அம்பாறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் 1 சம்பத் விக்ரமரத்னவின் மேற்பார்வையில் அம்பாறை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அசேல கே. ஹேரத் தலைமையிலான பொலிஸார் இந்தச் சோதனையை நடத்தினர்.

# சவளக்கடையில் கைக்குண்டு மீட்பு செயலிழக்கச் செய்ய நடவடிக்கை!

(பாறுக் ஷிஹான்)

வெற்றுக்காணி ஒன்றில் வெடிக்காத நிலையில் கைக் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீரச்சோலை பகுதியில் உள்ள பாடசாலைக்கு அருகில் உள்ள வெற்றுக்காணி ஒன்றில் இருந்து நேற்று கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. தற்போது மீட்கப்பட்ட கைக் குண்டைச்செயலிழக்கச்செய்ய விசேட அதிரடி படையினரால் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது.

பாகிஸ்தான் நாட்டுத் தயாரிப்பான இந்தக் கைக்குண்டு கடந்த காலங்களில் இப்பகுதியில் நடமாடிய ஆயுததாரிகளால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் காணி உழவு செய்ப்பட்டுள்ள நிலையில், மழை காரணமாக புதைந்திருந்த இக்கைக்குண்டு நிலத்தில் மேல் தெரிந்துள்ளது.

இந்நிலையில் அக்காணி வழியாக பாடசாலைக்கு தனது பிள்ளையை அழைத்துச் சென்ற குடும்பஸ்தர் இதனைக் கண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

அரச புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த சவளக்கடை பொலிஸார் கைக்குண்டுடைப் பார்வையிட்டதுடன் குண்டு செயலிழக்கும் விசேட அதிரடி படையினர் மற்றும் தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





# காரைதீவு விபுலானந்த மைதான விளையாட்டு அரங்கு ஆபத்தில்!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டம், காரைதீவு கிராமத்தில் அமைந்துள்ள விபுலானந்த விளையாட்டு மைதானத்திலுள்ள விளையாட்டு அரங்கு இன்று படுமோசமாகச் சேதமடைந்துள்ளது. பொது மக்கள் மற்றும் விளையாட்டு வீரர்களின் உயிருக்கு ஆபத்தாக மாறியுள்ளது.

2008 ஆம் ஆண்டு இரட்சண்ய சேனை எனும் அமைப்பால் ஒரு கோடி 30 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த அரங்கு, கடந்த பல ஆண்டுகளாக எந்தவிதமான முறையான பராமரிப்பும் இன்றிக் கைவிடப் பட்டுள்ளது.

மைதானத்தின் கூரை முற்றாகச் சேதமடைந்துள்ளது, தகரங்கள் காற்றில் அள்ளுண்டன. பல தகரங்கள் எந்த வேளையிலும் கீழே விழக்கூடிய அபாயம் உள்ளது. அரங்கில் உள்ள அறைகள், கதவுகள் இன்றி பாதுகாப்பற்று அசுத்தமாகக் காணப்படுகின்றன. அண்மையில் மூன்று கிரிக்கெட் கயிற்று பாய்கள் தீக்கிரையானதும் தெரிந்ததே. மலசலகூடங்களும் சேதமடைந்துள்ளன.

மழைக்கோ, வெயிலுக்கோ ஒதுங்க முடியாத ஓர் அரங்காக இது காட்சியளிப்பது கவலைக்குரியது. சுற்றுப்புறப் பகுதிகளும் சேதமடைந்துள்ளன. இந்த நிலையில் தினசரி இங்கு விளையாடி வரும் மாணவர்கள் மற்றும் விளையாட்டுகழக இளைஞர்கள் விபத்துகளுக்கு உள்ளாகும் அபாயம் தெளிவாகக் காணப்படுகிறது.

ஏதேனும் அசம்பாவிதம் நிகழ்ந்தால், அதற்கான பொறுப்பை ஏற்கப்போவது யார்? என்பதே காரைதீவு மக்களின் நேரடி கேள்வியாக உள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் முக்கிய விளையாட்டு மையமாக விளங்கிய இந்த மைதானம், அதன் அரங்கு இன்று அலட்சியத்தின் சின்னமாக மாறியுள்ளது என்று மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

காரைதீவு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் இது குறித்து முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்ட போதிலும், இதுவரை எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லை என்பது அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது என்று மக்கள் சாடுகின்றனர்.

இளைஞர்களின் விளையாட்டு வளர்ச்சி குறித்து மேடைகளில் உரையாற்றும் அதிகாரிகள், அடிப்படை வசதிகளை பாதுகாப்பதில் ஏன் மௌனம் காக்கின்றனர் என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நிதி ஒதுக்கீடு எங்கே? பராமரிப்பு திட்டங்கள் என்ன ஆனது? என்ற கேள்விகள் இன்று காரைதீவு மக்களிடையே எழுந்துள்ளன.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் விரைவாக இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட பாடசாலை கல்வித் திணைக்களம், பிரதேச செயலகம், விளையாட்டு, உள்ளூராட்சி மற்றும் மாவட்ட அதிகாரிகள் உடனடியாக களத்தில் இறங்கி, விபுலானந்த விளையாட்டு மைதான அரங்கை சீரமைத்து, பாதுகாப்பான முறையில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வழங்க வேண்டும். இல்லையேல், ஏதேனும் விபத்து ஏற்பட்டால், அதற்கான முழுப் பொறுப்பையும் அதிகாரிகளே ஏற்க வேண்டிய நிலை உருவாகும் என மக்கள் எச்சரிக்கையுடன் தெரிவித்துள்ளனர்.





# கல்முனை மாநகர வர்த்தகர்களுடன் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கலந்தாய்வு

(பாறுக் ஷிஹான்)

போதைப்பொருள் அச்சுறுத்தலை கல்முனை மாநகர வர்த்தகர்களின் உதவியுடன் ஒழிப்பதற்கான பல்வேறு திட்டங்களை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம் முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் கல்முனை மாநகர வர்த்தகர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் பல்வேறு திட்டங்கள், தீர்வுகள் முன்வைக்கப்பட்டன.

கூட்டமானது கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான ஏ.எல்.ஏ. வாஹிட் நெறிப்படுத்தலுடன் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் மற்றும் கல்முனை தலைமையக நிர்வாக பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் பங்கேற்புடன் நடைபெற்றது.

தேசிய பேரழிவாக மாறியுள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலை இந்த நாட்டிலிருந்து ஒழித்து, நாட்டின் எதிர்கால சந்ததியினரை இந்த அழிவிலிருந்து மீட்டெடுக்க அனைவரும் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் வலியுறுத்தினார்.

போதைப்பொருள் விநியோகத்தை ஒழித்தல், சோதனை நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல், இதற்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வு அளித்தல், போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட வேலைத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் போதைப் பொருள்களுக்கு எதிராக சமூகத்தை வலுப்படுத்துதல் உள்ளிட்ட பன்முக அணுகுமுறையின் மூலம் கல்முனை மாநகரில் பரவலாக உள்ள போதைப் பொருள் அச்சுறுத்தலை ஒழிக்கும் நோக்கத்துடன் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.





# நுளம்பு கட்டுப்பாட்டுப் பரிசோதனை

**(பாறுக் ஷிஹான்)**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட சாய்ந்தமருது 07 சந்தை வீதியில் நுளம்புக் கட்டுப்பாட்டு பரிசோதனை இடம்பெற்றது.

இன்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே.மதனின் வழிகாட்டலில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நுளம்புக் களத்தடுப்பு உதவியாளர்களின் பங்குபற்றலுடன் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பரிசோதனையில் நுளம்புப் பெருக்கத்துக்குச் சாதுவான இடங்கள் உடன் சீர் செய்யப்பட்டன. நுளம்புக் குடம்பிகள் காணப்படும் இடங்கள் உடன் அழிக்கப்பட்டன. அதனை சீர் செய்ய சிவப்பு அறிவித்தல் மூலம் இரண்டு நாள் கால அவகாசம் வழங்கப்பட்டது.

சீர் செய்ய தவறும் பட்சத்தில் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வலியுறுத்தப்பட்டது.





# எமது சமூகத்தின் எதிர்காலம் கல்வியில்தான் தங்கியுள்ளது!

## விடுகை விழாவில் பிரதேச செயலாளர் அருணன் தெரிவிப்பு

**(வி.ரி.சகாதேவராஜி)**


எமது சமூகத்தின் எதிர்காலம் கல்வியில்தான் தங்கியுள்ளது என்று காரைதீவு பிரதேச செயலாளர் எந்திரி ஜி. அருணன் தெரிவித்தார்.

காரைதீவு விபுலானந்த மொன்டிசோரி முன்பள்ளி விபுலவிழுதுகளின் 27 ஆவது வருட விடுகை விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வியில் முதலீடு செய்வதே சமூக முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்றும் கூறினார்.

நிகழ்வு வித்தகர் விபுலமாமணி விரி. சகாதேவராஜா தலைமையில் காரைதீவு இராமகிருஷ்ண சங்க ஆண்கள் பாடசாலை மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் சு.பாஸ்கரன், கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுதாமதி சந்திரகாந்தன், ஓய்வு நிலை அதிபர் க.புண்ணியநேசன், தொழிலதிபர் வி.சந்திரமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# மாசுபட்டுக் கருப்பாகப் பாயும் கொத்மலை ஓயாவின் தண்ணீர்!

(மஸ்கெலியா நிருபர்)

கொத்மலை ஓயாவின் நீர் நேற்று கடுமையாக மாசுபட்டு கருப்பாகப் பாய்ந்ததால், கொத்மலை ஓயாவைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர் என்று லிந்துல நகரவாசிகள் தெரிவித்தனர்.

கொத்மலை ஓயாவின் நீர் சில நேரங்களில் கடுமையான துர்நாற்றத்துடன் பாய்கிறது, நீரின் நிறம் மாறி வெள்ளை நுரை குமிழ்கள் தோன்றும். மேலும் கொத்மலை ஓயாவின் நீர் கடுமையான துர்நாற்றத்துடன் பாய்ந்து நிறம் மாறும்போது, தண்ணீரை எந்தத் தேவைக்கும் பயன்படுத்த முடியாது என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொத்மலை ஓயாவின் இரண்டு முக்கிய நீர் ஆதாரங்கள் ஹார்டன் சமவெளியில் இருந்து பாயும் ஆக்ரா ஓயா மற்றும் அம்பேவெல பகுதியில் இருந்து பாயும் அல்ஜின் ஓயா ஆகும். அல்ஜின் ஓயாவின் நீரில் பல்வேறு அசுத்தங்கள் கலப்பதால் கொத்மலை ஓயாவின் நீர் மாசுபடுவதாக லிந்துல குடியிருப்பாளர்கள் கூறுகின்றனர்.

அல்ஜின் ஓயா நீர் பெருமளவில் மாசுபட்டதாலும், அந்த நீர் கொத்மலை ஓயாவுடன் கலப்பதாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று லிந்துல மக்கள் கூறுகின்றனர்.

அல்ஜின் ஓயாவின் நீர்நிலைகளில் மேற்கொள்ளப்படும் பல்வேறு மனித நடவடிக்கைகள் மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்களின் பல்வேறு கழிவுகள் இதற்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட மக்கள் குளிக்கவும், துணிகளைத் துவைக்கவும், தங்கள் விவசாய நிலங்களுக்கு நீர் வழங்கவும் பல்வேறு வழிகளில் தண்ணீரைப் பயன்படுத்துகின்றனர். இந்த நிலையில் நீர் இவ்வளவு மாசுபட்ட முறையில் பாயும் நாள்களில் இந்த மக்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பாக பொறுப்பான அரசுத் துறைகள் பல சந்தர்ப்பங்களில் விசாரணைகள் மற்றும் பல்வேறு விசாரணைகளை நடத்தியிருந்தாலும், மக்களை கடுமையாக பாதித்த இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு எதுவும் கிடைக்கவில்லை என்று லிந்துல மக்கள் மேலும் கூறுகின்றனர்.

இதன் விளைவாக, கொத்மலை ஓயா மற்றும் மேல் கொத்மலை மற்றும் கொத்மலை நீர்த்தேக்கங்களில் வாழும் நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கயிருடன் காணப்பட்ட தயிர்வடைகள் சாய்ந்தமருதில் உணவகத்தில் சம்பவம்





(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகள் நேற்று கொட்டும் மழைக்கும் மத்தியில் சோதனை செய்யப்பட்டுள்ளன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் ஆலோசனைக்கு அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே.மதன் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நுளம்பு களத்தடுப்பு உதவியாளர்களின் பங்கேற்புடன் வீதியோர சந்தை மற்றும் பெண்கள் சந்தை என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது அங்கு காணப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய வலியுறுத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் அடிக்கடி பரிசோதனைகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை உணவகங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதன் உட்கட்டமைப்பு வசதிகள் ஒழுங்கின்மையுடன் காணப்பட்டதுடன் அதனை சரி செய்வதற்காக ஒரு வார காலம் அவகாசமும் வழங்கப்பட்டது.மேலும் இதில் நுகர்வுக்கு பொருத்தமற்ற கயிருடன் காணப்பட்ட தயிர்வடைகள் பறிமுதல் செய்யப்பட்டன. உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

# சர்வதேச சட்டத்தை, ஐ.நா. சாசனத்தை எந்த நாடும் மீறிச் செயற்பட முடியாது!

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் காட்டம்



(யூ.கே. காலித்தீன்)

எந்த நாடும் சர்வதேச சட்டத்தையும், ஐ.நா. சாசனத்தையும் மீறிச் செயற்பட முடியாது என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் காட்டம் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி, வெனிசியூலாவை ஆக்கிரமித்து, அதன் ஜனாதிபதியை சிறை பிடித்துள்ளதை வன்மையாகக் கண்டித்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள கணடமன அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் அவர் நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச சட்டத்தில் நாடொன்றை அபகரிப்பதற்கும் பலவந்த ஆட்சி மாற்றத்துக்கும் அறவே இடமில்லை.

லத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் உலகின் ஏனைய பகுதிகளில் உள்ள பல நாடுகள், தங்களது இறையாண்மை மற்றும் நிலப்பரப்பு ஒருமைப்பாட்டை மீறக்கூடிய வகையில், இராணுவ தாக்குதல்கள் மற்றும் வேறு கட்டாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அச்சுறுத்தப்படுவது குறித்து ஆழ்ந்த கவலையுடன் உற்று நோக்கப்படுகிறது.

இந்த அச்சுறுத்தல்கள், குறிப்பாக, வெனிசியூலா மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத இராணுவ ஊடுருவல்கள் மற்றும் அந்த நாட்டின் ஜனாதிபதி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட சம்பவங்களின் பின்னணியில் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் தற்போதைய டிரம்ப் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டவையாகும்.

எவ்வளவு பெரியதோ அல்லது சக்தி வாய்ந்ததோ என்றாலும், எந்த நாடும் சர்வதேச சட்டத்தையும் ஐக்கிய நாடுகள் சபை சாசனத்தையும் வெளிப்படையாக மீறுவதற்கு எவ்வித உரிமையுமில்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய உலகை ஒழுங்கு, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்குச் சில தொடர்ச்சியான, இன்னும் தீர்க்கப்படாத சவால்கள் இருந்த போதிலும் கூட, மொத்தத்தில் இதில் உலகின் நிலைப்பாடு உறுதிப்படுத்தப்பட்டதாகும்.

ஆனால் இன்று சுயநல புவியியல், அரசியல் இலக்குகளை அடைவதற்காக கொடூரமாகவும் தீவிரமாகவும் முன்னெடுக்கும் நடவடிக்கைகள், அந்த ஒழுங்கை மேலும் நிலைகுலையச் செய்கின்றன. இன்றைய பூகோள அரசியலில் தற்காலிகமாக மேலோங்கியுள்ள வளங்களைச் சுரண்டுவதற்கான பேராசை, சர்வதேச சட்ட நெறிமுறைகளுக்கும் தூதரக நடைமுறைகளுக்கும் முற்றிலும் முரணானதாகும்.

அமெரிக்காவின் வெளிநாட்டு கொள்கை சாகசப்போக்கு, ஆட்சி மாற்றத் திட்டங்கள், அபகரிப்பு ஆசைகள் மற்றும் போர்களின் மூலம் மேற்கொள்ளப்படும் அட்டூழியங்களை மறைத்திருந்த அதன் முகமூடி கிழிந்து விட்டது என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

இப்போது அது வெளிப்படையாகவும் வெட்கமின்றியும் பிற நாடுகளின் வளங்களின் மீது உரிமையையும், ஆதிக்கத்தையும் கோருகிறது. ஆனால் சர்வதேச சட்டத்தின் படி, இயற்கை வளங்களின் மீதான முழு இறையாண்மையும் அவை வழங்கப்பட்டுள்ள அந்தந்த நாடுகளுக்கே சொந்தமானதாகும்.

இவ்வாறான முன்னேற்றங்கள், தடையின்றி தொடர அனுமதிக்கப்படுமானால் மனிதகுலம் முழுவதற்கும் இழிவை ஏற்படுத்தும். மேலும், ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டதற்கான அடிப்படை நோக்கமான மற்றொரு உலகப் போரைத் தவிர்ப்பதைப் பாதிக்கும் வகையில், உலகை ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்லும் இந்த மிகக் கொடூரமான செயல்கள் மற்றும் சம்பவங்களை நாம் எந்தவிதமான தயக்கமுமின்றி மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

நாடுகளுக்கிடையிலான மோதல்கள் மற்றும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான ஒரேயொரு வழியாகப் பரஸ்பரம் கலந்துரையாடலும், ஒத்துழைப்புமே இருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மற்றும் பலவீனமான நாடுகளுக்கும் மக்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறை கொள்கைகள் மற்றும் அநீதிகளை நீக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம்.

சர்வதேச சமூகமானது, சம்பந்தப்பட்ட நாடுகளுடன் ஒற்றுமையுடன் ஒன்றிணைந்து, உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்தும் ஒருதலைப்பட்சத் தூண்டுதல்களை கட்டுப்படுத்துவதற்காக செயல்பட வேண்டிய தருணம் இதுவாகும்.– என்றுள்ளது.



# தி.மு.க. ஆட்சியில் 4 லட்சம் கோடி ரூபா ஊழல்: தமிழ்நாடு ஆளுநர் ரவியிடம் பழனிசாமி புகார்



ஆளுநர் ஆர்.என்.ரவியைச் சந்தித்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனி சாமி, தி.மு.க. ஆட்சியில் நான்கரை ஆண்டுகளில் 4 லட்சம் கோடி இந்திய ரூபா ஊழல் நடைபெற்றதற்கான புகார் பட்டியல் வழங்கியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான பழனிசாமி, சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் ஆளுநர் ஆர்.என்.ரவியை நேற்று சந்தித்தார். அப்போது, திமுக ஆட்சியில் நடைபெற்ற 4 லட்சம் கோடி இந்திய ரூபா ஊழல்கள் குறித்தான புகார் பட்டியல் வழங்கி, அவற்றை விசாரிக்க உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அவருடன் முன்னாள் அமைச்சர்கள் நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், எஸ்பி.வேலு மணி, தங்கமணி, சி.வி.சண்முகம், டி.ஜெயக்குமார் ஆகியோர் உடனிருந்த னர்.

ஆளுநரிடம் மனு அளித்து விட்டு, வெளியே வந்தபின் செய்தியாளர்களிடம் பழனிசாமி கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 2021 முதல் நான்கரை ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற 4 லட்சம் கோடி இந்திய ரூபா ஊழல் குறித்த பட்டியலை ஆளுநரிடம் வழங்கி உள் ளோம். தி.மு.க. கடந்த 56 மாதங்களாக, ஆண்டுக்கு 1 லட்சம் கோடி இந்திய ரூபா கடன் வாங்கி,தமிழகத்தில் மிக மோசமான நிர்வாகம் செய்துள்ளது.

இதனால் ஏற்கெனவே இருந்த கடனை விட, கூடுதலாக சுமார் 4 லட்சம் கோடி இந்திய ரூபா கடன் அதிகரித்துள்ளது. ஆட்சிக்கு வந்த ஓர் ஆண்டிலேயே திமுக அரசின் கொள்ளை குறித்து ஆடியோவில் தெரிய வந்தது. 30 ஆயிரம் கோடி இந்திய ரூபாவை வைத்துக் கொண்டு, சபரீசனும், உதயநிதியும் என்ன செய்வது என்று தெரியாமல் தவிப்பதாக அப்போதைய நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசிய காணொலி வெளியானது.

ஊழல் செய்வதைத் தவிர, தமிழக மக்களுக்கு இவர்கள் எந்த நன்மையும் செய்யவில்லை. அரசின் பல்வேறு துறை களில் அதிகளவில் ஊழல் செய்து, தமிழக மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக் கிறது என்பதையும், துறைவாரியாக எவ்வ ளவு ஊழல் நடைபெற்றது என்பதையும் ஆளுநரிடம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஊழல் குறித்த புகார் பட்டியல், முழு விவ ரங்களையும் வழங்கி இருக்கிறோம். ஊழல் குறித்து விசாரிக்க உச்ச நீதி மன்ற ஓய்வுபெற்ற நீதிபதி தலைமை யில் விசாரணை ஆணையம் அமைக்க வேண்டும் எனவும் ஆளுநரிடம் கோரிக்கை வைத்திருக்கிறோம்.” என்று தெரிவித் துள்ளார்.

# ‘ஜனநாயகன்’ தணிக்கையினை இழுத்தடிக்க வேண்டியதில்லை

## சீமான் தெரிவிப்பு

‘ஜனநாயகன்’ திரைப்படத்துக்கு தணிக்கை சான்றிதழ் தருவதற்கு இழுத்தடிக்க வேண்டியதில்லை என்று சீமான் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப் பாளர் சீமான் ஈரோடு செல்வதற்காக, சென்னையில் இருந்து விமானம் மூலம் நேற்று மாலை கோவை சென்றார்.

கோவை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரி விக்கையில்,

“திருப்பரங்குன்றம் விவகாரத்தில் இன்று வழங்கப்பட்ட தீர்ப்பை தொடர்ந்து அனைவரது இல்லங்களிலும் விளக் கேற்ற வேண்டும் என்று பா.ஜ.க. சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளனர் எனக் கேட்கின்றீர்கள். நாட்டில் பல கோடி மக்கள் பசியாக இருக்கிறார்கள் முதலில் அவர்களது வீடுகளில் விளக் கேற்றுங்கள். பிறகு வீடு வீடாக விளக் கேற்றலாம். வீடுகள் எல்லாம் இருட் டிலா உள்ளது?

‘ஜனநாயகன்’ திரைப்படத்திற்கு ஏதோ ஒரு சான்றிதழை கொடுத்து விட லாம். அதன் தெலுங்கு பதிப்பை நான் பார்த்திருக்கிறேன். நெருக்கடி தரும் அளவிற்கு அதில் ஒன்றும் இல்லை. எனவே தணிக்கை சான்றிதழ் தருவ தற்கு இவ்வளவு இழுத்தடிக்க வேண் டிய அவசியமில்லை. தமிழ் என்பது



சீமானுக்கு அரசியல் பிழைப்பு என்று சுப வீரபாண்டியன் தெரிவித்துள்ளார். உயிரோடு இருப்பவர்களின் கருத்துக் களுக்கு மட்டும் பதில் அளிக்கலாம்.” என்று தெரிவித்துள்ளார்.

# அசாம் மாநில சட்டப்பேரவைத் தேர்தல்: வேட்பாளர் தேர்வு தலைவராக பிரியங்கா



அசாமில் கடந்த 10 ஆண்டுக ளுக்கு முன்பு வரை காங்கிரஸ் ஆட்சி யில் இருந்தது. தற்போது பிரதான எதிர்க் கட்சியாக உள்ளது.

இச்சூழலில் வரும் ஏப்ரல், மே மாதங் களில் அசாம் சட்டப்பேரவைக்கு தேர் தல் நடைபெற உள்ளது. அசாமை மீண்டும் கைப்பற்ற காங்கிரஸ் முன் கூட்டியே தயாராகி வருகிறது.

இதற்கான முக்கியப் பொறுப்பை மக்களவை எம்.பி. பிரியங்கா வதே ராவிடம் காங்கிரஸ் அளித்துள்ளது. அசாமின் வேட்பாளர் தேர்வுக்குழு தலை வராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மக்களவை தேர்தலுக்கு முன் 2019 இல் அதிகாரப்பூர்வமாக கட்சி யில் இணைந்தார் பிரியங்கா. அப்போது முதல் அவருக்கு முக்கியப் பொறுப்புகள் வழங்கப்பட வேண்டும் என காங்கிரஸ ரர் விரும்பினர்.

இந்நிலையில், இப்புதிய நியமனம் மூலம் கட்சியின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு உள்ளதாகவும் கருதப்படுகிறது.

# பனிப்பொழிவு, குளிரால் முடக்கப்பட்ட ஐரோப்பா





ஐரோப்பாவில் கடும் குளிர் மற்றும் பனிப்பொழிவு காரணமாக பிரித்தானியா, பிரான்ஸ், நெதர்லாந்து உட்பட்ட பல நாடுகளில் நெருக்கடிகள் எழுந்துள்ளன.

கடந்த இரு நாள்களாக ஐரோப்பிய நாடுகளில் நூற்றுக்கணக்கான விமான சேவைகளும், ரயில் மற்றும் போக்கு வரத்து சேவைகள் முடங்கியுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

பனிப்பொழிவால் பாதிக்கப்பட்ட பரிஸ் நகரில் சுமார் ஆயிரம் கிலோ மீற்றருக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த வாரத்தின் ஆரம்பம் முதலே வடக்கு ஐரோப்பிய நாடுகளின் பெரும் பகுதியில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்ட தால் ஆம்ஸ்டர்டாமின் ஷிபோல் விமான நிலையத்தில் நேற்று முன் தினம் புறப்பட அல்லது தரையிறங்க திட்ட மிடப்பட்டவிமானங்களில்400சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

வடமேற்கு பிரான்ஸின் பெரும் பகுதிகளில் ஏற்பட்ட பனிப்பொழிவால் சார்லஸ் டி கோல் மற்றும் ஓர்லி விமான நிலையங்களும் பாதிப்படைந்துள்ளன.

பிரான்ஸ் தலைநகரில் நேற்று முன் தினம் 1,000 கிலோ மீற்றர் வரையான போக்குவரத்து நெரிசலில் வாகனங்கள் சிக்கிக்கொண்டதாக கூறப்படுகிறது.

பிரான்ஸ் போக்குவரத்து அமைச் சர், பரிஸின் வீதிகளில் நேற்று வேகக் கட்டுப்பாட்டு தொடர்பில் விதிமுறை களை உத்தரவிட்டதைத் தொடர்ந்து போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள் ளது.

பனிப்பொழிவு மற்றும் கடும் குளிர் காரணமாக ஐரோப்பா முழுவதும் ரயில் மற்றும் வீதிப்போக்குவரத்து சேவை களும் பாதிப்படைந்துள்ளன.

லண்டன் – பரிஸ் மார்க்கத்தில் சில யூரோஸ்டார் தொடந்து சேவைகள் நிறுத் தப்பட்டன என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி நேற்று காலை, லண்டனில் இருந்து பரிஸ்/க்குச் செல்லும் சேவைகள் தாமதங்களைச் சந்தித்துள்ளன.

அதே நேரத்தில் லண்டனில் இருந்து பிரஸ்ஸல்ஸ் மற்றும் ஆம்ஸ்டர்டாம் நகரங்களுக்கான ரயில் சேவைகளும் மீளெடுபட்டுள்ளன.

பிரித்தானியாவில் பனி பொழிவு காரணமாக நூற்றுக்கணக்கான பாட சாலைகள் நேற்று மூடப்பட்டன என தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்து பிராந்தியங்க ளில் போக்குவரத்து சேவைகள் பாதிப் படைந்துள்ளன என தெரிவிக்கப்படு கிறது.

## சுவிஸ் மதுபான விடுதி தீவிபத்து

# நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்கிறார் மேக்ரான்!





சுவிட்சர்லாந்திலுள்ள மதுபான விடுதி ஒன்றில் நிகழ்ந்த தீவிபத்து நாட்டையே உலுக்கியுள்ள நிலையில், அந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்காக நடத்தப்படும் நினைவேந்தல் நிகழ்ச்சி யில் கலந்துகொள்வதற்காக பிரான்ஸ் ஜனாதிபதி சுவிட்சர்லாந்து செல்கிறார் .

சுவிட்சர்லாந்தின் ஏயடயளை மாகா ணத்திலுள்ள Crans-Montana என்னு மிடத்தில் அமைந்துள்ள பனிச்சறுக்கு ரிசார்ட்டின் Le Constellation என்னும் மதுபான விடுதியில் புத்தாண்டு தினத் தன்று நிகழ்ந்த தீவிபத்தில் 40 பேர் பலியானார்கள், நூற்றுக்கும் அதிக மானோர் காயமடைந்தார்கள்.

இந்நிலையில், வரும் வெள்ளிக் கிழமையன்று, அந்த தீவிபத்தில் பாதிக் கப்பட்டவர்கள் நினைவாக, சுவிட்சர் லாந்தில், தேசிய அளவில் நினைவேந் தல் நிகழ்ச்சி ஒன்று நடைபெற உள்ளது.

அந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக, பிரான்ஸ் ஜனாதிபதி யான இமானுவல் மேக்ரான் சுவிட்சர்லாந்து செல்ல இருக்கிறார் .

சுவிஸ் மதுபான விடுதி தீவிபத்தில் உயிரிழந்தவர்களில் பிரான்ஸ் நாட்ட வர்கள் 09 பேரும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 03

# கனடா முரசு

புதன்கிழமை 07/01/2026

## கனடாவில் இடம்பெற்ற விபத்தில் பெண் மரணம்



C3



# பசுமை வினியோகச் சங்கிலிகளை மாற்றும் அவுஸ்திரேலியா - கனடா - இந்தியா கூட்டணி

அவுஸ்திரேலியா, கனடா மற்றும் இந்தியா இணைந்து முக்கிய கூட்டணி ஒன்றை உருவாக்கியுள்ளன.

உலகளாவிய வர்த்தகத்தில் சுங்கக் கட்டணங்கள், தடைகள், ஏற்றுமதி கட்டுப்பாடுகள் அதிகரித்து வரும் நிலையில், பசுமை தொழில்நுட்பத்திற்கான விநியோகச் சங்கிலிகள் பாதிக்கப்படுகின்றன.

இதை சமாளிக்க அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா இணைந்து ACITI தொழில்நுட்ப கூட்டணியை அறிவித்துள்ளன.

சுத்தமான எரிசக்தி, முக்கிய கனிமங்கள் (லித்தியம், கோபால்ட், நிக்கல், ரேர் எர்த்), நீண்டகால பொருளாதார பாதுகாப்பு ஆகியவை இந்த கூட்டணி முயற்சியின் முக்கிய இலக்குகள் ஆகும்.

C2

# கனடாவில் 2026இல் நிரந்தக் குடியுரிமை: தற்காலிக வசிப்போருக்கு முன்னுரிமை



கனடா குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமைத் திணைக்களம், 2026ஆம் ஆண்டிற்கான தனது முதலாவது எக்ஸ்பிரஸ் அனுமதி குலுக்கலை நேற்றுமுன்தினம் நடத்தியது.

மாகாண நியமனத் திட்டத்தின் கீழ் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்காகவே இத்தேர்வு பிரத்யேகமாக நடத்தப்பட்டது.

இந்தச் சுற்றில் மொத்தம் 574 விண்ணப்பதாரர்களுக்கு நிரந்தர வதிவிட உரிமைக்கு விண்ணப்பிப்பதற்கான அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

அழைப்பிதழ் பெற்ற விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் 711 சி.ஆர்.எஸ் புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

2025ஒக்டோபர்06ஆம்திகதிஅன்று அதிகாலை 01:54 மணிக்கு முன்னதாகத் தமது விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

C2




# ஆசியாவிற்கான எண்ணெய் சந்தையை விரிவுபடுத்துவதற்கு கனடா நடவடிக்கை

அமெரிக்க சந்தையில் வெனிசுவேலாவின் எண்ணெய் ஆதிக்கம் செலுத்தக்கூடும் என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியில், ஆசியாவிற்கான தனது எண்ணெய் சந்தையை விரிவுபடுத்தக் கனடா பணியாற்றி வருவதாகப் பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

பசுபிக் கடற்கரைக்கு செல்லும் எண்ணெய் குழாய் திட்டத்திற்கு உடனடியாக ஒப்புதல் அளிக்குமாறு பிரதமர் கார்னிக்கு எழுதிய கடிதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பெய்ரே பொய்லிவ்ரே வலியுறுத்தியுள்ளார்.

உக்ரைன் தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்காக பாரிஸில் தங்கியிருந்த கார்னியிடம், வெனிசுவேலாவின் எண்ணெய் துறையை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர விரும்புவது தொடர்பாகவும், அதனால் பி.சி. கடற்கரைக்கான குழாய் திட்டத்தின் அவசியம் குறித்தும் கேட்கப்பட்டது.

ஆல்பர்ட்டா அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட விரிவான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, புதிய எண்ணெய் குழாய் திட்டம் மற்றும் சந்தை விரிவாக்கம் ஆகியவற்றில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகப் பிரதமர் கார்னி பதிலளித்துள்ளார்.

வெனிசுவேலாவில் நடக்கும் நிகழ்வுகள், பசுபிக் கடற்கரைக்கான புதிய எண்ணெய் குழாய் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக ஆல்பர்ட்டா மாகாண முதல்வர் டேனியல் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க மாகாண அரசு தயாராகி வருவதாகவும், மத்திய அரசாங்கம் இதில் அவசரமாகச் செயல்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

## பசுமை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவுஸ்திரேலியா உலகின் முன்னணி லித்தியம் உற்பத்தியாளராக உள்ளது.

அதேநேரத்தில், கனடா பசுமை தொழில்நுட்பத்தில் பெரும் முதலீடுகளை மேற்கொண்டுவருகிறது.

இந்தியா, 2030-க்குள் 500 புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை தயாரிக்கும் இலக்கை கொண்டுள்ளது. அந்த வகையில், இந்த மூன்று நாடுகளும் ஒரே மாதிரியான நோக்கத்தை பிரதிபலிக்கின்றன.

இந்த கூட்டணி, குறைந்த தாக்கம் கொண்ட சுரங்கம், மறுசீரமைப்பு, நகர்ப்புற சுரங்கம் போன்ற ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கிறது. மேலும், லித்தியம், கோபால்ட், நிக்கல், காப்பர் போன்ற கனிமங்களை மறுசுழற்சி செய்வதற்கு முன்னுரிமை அளிக்கிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக நலனை மையமாகக் கொண்ட தொழில்நுட்ப வளர்ச்சியை இந்த கூட்டணி நாடுகள் முயற்சிக்கின்றன.

ஏ.ஐ. போன்ற துறைகள், பசுமை மற்றும் சுகாதார தீர்வுகளுக்கான துணை அடுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

ACITI அதன் முயற்சிகளை தொடர்ந்து கடைபிடித்தால், அது ஒரு சுத்தமான, நம்பகமான ஆற்றல் எதிர்காலத்திற்கான கட்டிடமைப்பை உருவாக்க முடியும் என நம்பப்படுகிறது.

---

## கனடாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆண்டிற்கான குடியேற்றக் கொள்கையின்படி, கனடா அரசாங்கம் சில முக்கியமான முன்னுரிமைகளை அறிவித்துள்ளது.

ஏற்கனவே கனடாவில் தற்காலிகமாக வசித்து வரும் மாணவர்களுக்கும் பணியாளர்களுக்கும் நிரந்தர வதிவிட உரிமை வழங்குவதில் அதிக கவனம் செலுத்தப்படும்.

கியூபெக் மாகாணத்திற்கு வெளியேயான பகுதிகளில் பிரெஞ்சு மொழி பேசும் குடியேறிகளை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதால், மொழித் திறன் அடிப்படையிலான தேர்வுகள் அதிகரிக்கக்கூடும்.

கனடாவில் பணி அனுபவம் பெற்ற வெளிநாட்டு மருத்துவர்களுக்காக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிரிவின் கீழ் குலுக்கல்கள் இந்த ஆண்டு ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண நியமனம் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு மேலதிகமாக 600 புள்ளிகள் வழங்கப்படுவதால், இவ்வகையான குலுக்கல்களில் வெட்டுப் புள்ளிகள் பொதுவாக அதிகமாகக் காணப்படுகின்றன.

அழைப்பிதழ் பெற்றவர்கள் அடுத்த 60 நாள்களுக்குள் தமது முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ட்ரம்ப் வரம்பு மீறி செயற்படுகின்றார்

## கனடிய முன்னாள் ராஜதந்திரி தெரிவிப்பு



வெனிசுவேலாவில் அமெரிக்கா மேற்கொண்ட சமீபத்திய இராணுவ நடவடிக்கை, கனடாவும் கிரீன்லாந்தும் தங்களின் இணைதொடர்பான அச்சுறுத்தல்களை இனி அலட்சியமாக எடுத்துக்கொள்ள முடியாது என்பதை தெளிவாக காட்டுகிறது என கனடாவின் முன்னாள் ஐக்கிய நாடுகள் சபை தூதர் பாப் ரே எச்சரித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி இப்போது 'அடுத்த இலக்கு யார்?' என்ற புதிய சந்தேக விளையாட்டையே தொடங்கியுள்ளார், எனக் கூறியுள்ளார்.

கிரீன்லாந்து மீது தாக்குதல் நடத்தப்பட்டால், அது நேட்டோ மீது நடத்தப்படும் தாக்குதலாகவும், டென்மார்க் என்ற நட்பு நாட்டின் மீது நடத்தப்படும் தாக்குதலாகவும் கருதப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"இது வெறும் ஊகமல்ல. ஒரு அதிபர் இப்படிப்பட்ட திட்டங்களை பகிரங்கமாக பேசுவதும், அதை நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதும் உண்மையிலேயே அதிர்ச்சியளிக்கிறது," என பாப் ரே தெரிவித்தார்.

ஜனவரி 3-ஆம் திகதி, அமெரிக்க இராணுவம் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் வெனிசுவேலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவும், அவரது மனைவியும் கைது செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்காவின் "தேசிய பாதுகாப்பு" என்ற பெயரில், டென்மார்க் நாட்டுக்குச் சொந்தமான தன்னாட்சி பிரதேசமான கிரீன்லாந்தை கைப்பற்ற வேண்டும் என்ற கருத்தை டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், கனடாவை அமெரிக்காவின் 51-ஆவது மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற அவரது கருத்தும் சர்வதேச அளவில் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. "இவை வெறும் பேச்சுக்கள் அல்ல," என பாப் ரே கூறியுள்ளார்.

அவர் நம்மை யார் என்று, நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதையே இது வெளிப்படுத்துகிறது.

நம்மைவிட அவர் நம் நாட்டைச் சிறப்பாக நடத்த முடியும் என்ற மனநிலை அவரிடம் உள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார்.

வெனிசுவேலா, கிரீன்லாந்து மற்றும் கனடா குறித்த டிரம்பின் நிலைப்பாடுகள், அமெரிக்காவின் புதிய தேசிய பாதுகாப்பு கொள்கையுடன் நேரடியாக ஒத்துப் போகின்றன என பாப் ரே கூறியுள்ளார்.

# கனடாவில் இடம்பெற்ற விபத்தில் பெண் மரணம்



கனடாவின் கவர்தா ஏரிப் பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் ஒரு பெண் உயிரிழந்துள்ளார்.

கில்லர்னி பே சாலைக்கு மற்றும் கேம்ப்ரே சாலைக்கு இடையே இரண்டு வாகனங்கள் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த ஒரிலியாவைச் சேர்ந்த 60 வயது பெண் ஒருவர் உள்ளூர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் அவர் இறந்துவிட்டார் என அறிவிக்கப்பட்டது. இரண்டாவது வாகனத்தின் ஓட்டுநர் காயமடையவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

மோதலின் போது பனிப்பொழிவு காரணமாக சாரதிகளின் பார்வை திறன் குறைவாக காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மோதலை நேரில் பார்த்தவர்கள் அல்லது அந்த நேரத்தில் அந்தப் பகுதியிலிருந்து டேஷ்-கேம் அல்லது காணொலி காட்சிகள் வைத்திருக்கக்கூடியவர்கள் 1-888-310-1122 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.